(குறுக்கீடுகள்) இப்படி என்னை வற்புறுத்த முடியாது. எதை எதை priority-*ஆக எடுத்துக்கொள்ள வேண்டுமென்பது தலைவருடைய உரிமை. (குறுக்கீடுகள்) முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

நான் வாய்ப்புத் தருகிறேன் என்று சொன்னதற்குப் பிறகும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் இன்றைக்கு வெளிநடப்புச் செய்திருப்பது துரதிருஷ்டவசமானது. அதற்காக என்னுடைய வருத்தத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. சுற்றுச்சூழல் பாதுகாப்பினை செம்மைப்படுத்துதல் மற்றும் ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவர்களின் கல்வி சார்ந்த திட்டங்களை வலுப்படுத்துதல்-முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

முனைவர் செ.கு. தமிழரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித சமூகத்தின் வாழ்க்கை என்பதே நன்றி என்ற உணர்வின் தொடர்ச்சியாகத்தான் இருக்க முடியும் என்று ஒரு தத்துவவாதி சொன்னார். வாழ்வதும், வளர்வதும், மகிழ்வதும் ஆக ஒவ்வொரு நிலையிலும் மனித சமூகத்தின் உணர்வு என்பதே இதற்கு உதவுகிற, துணை நிற்கிற, அனைத்து சக்திகளுக்கும் நன்றி கடப்பாடு உடைய இயல்புதான் மனித வாழ்க்கையாக இருக்க முடியும்.*

முற்பகல் 11-15

இன்றைக்கு போற்றுதலுக்குரிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏழையெளிய மக்களுக்காக உயர் கல்வியிலே இந்தியத் துணைக் கண்டத்தின் தென்கோடி தமிழ் மாநிலத்திலே ஒரு கல்விப் புரட்சியைச் செய்து, இந்த ஆண்டு மட்டும் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆதி திராவிட மாணவர்கள் பொறியியல் கல்வி பெறுகிற வசதியை, வாய்ப்பை உருவாக்கியிருக்கிறார்கள்.

2015 ஆகஸ்ட் 27] [முனைவர் செ.கு. தமிழரசன்]

(மேசையைத் தட்டும் ஒலி) உயர் கல்வியிலே புரட்சி தந்து, உயர் கல்வியிலே ஒரே ஆண்டிலே 50 ஆயிரம் ஆதி திராவிட மாணவர்கள் மிக அதிக அளவிலே சேர்க்கை நடக்கிற அளவிற்கு ஒரு புரட்சியை உருவாக்கிய மாண்புமிகு அம்மா அவர்கள் இன்றைக்கு அதற்கு அடித்தளமாக இருக்கிற உயர்நிலைக் கல்வியிலே, மேல்நிலைக் கல்வியிலே ஆதி திராவிட மாணவர்கள் அதற்கான தகுதியையும், பயிற்சியையும் பெறுவதற்கு அதற்கான சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். யாருக்கு இந்த உணர்வும், சிந்தனையும் வரும்? கோட்டையிலே உட்கார்ந்து கொண்டிருக்கிறவர்கள் ஆதி திராவிட பள்ளி விடுதிகளிலே, தட்டு எந்த வகையிலே இருக்கிறது என்பதைப் பார்த்து, அந்தத் தட்டைக்கூட மாற்றி அமைக்கிற அந்தச் சிந்தனை, கோட்டையிலே இருந்தாலும் அந்தக் குடிசையிலே என்ன நடந்துகொண்டிருக்கிறது, (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் குடிசைவாழ் மக்களுடைய உணர்வுகளும், சிந்தனைகளும், வாழ்க்கை நிலையும் எப்படி இருக்கின்றன என்பதை நினைத்து அதை மாற்றி அமைப்பதற்கு இந்த அரசு முன்வர வேண்டும் என்ற அந்தச் சிந்தனையோடு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தச் சீரிய திட்டங்களையெல்லாம் அறிவித்திருக்கிறார்கள். பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றி, உண்டி உறைவிடப் பள்ளிகளின் எண்ணிக்கையை அதிகமாக்கி, அதுமட்டுமல்லாமல், ஆதி திராவிட பள்ளி மாணவ/மாணவிகள் தொலைவிலே சென்று வரக்கூடிய நிலையைக்கூட மாற்றி அமைப்பதற்கான திட்டங்களை வகுத்திருக்கிறபோது, இதை ஒர் ஒடுக்கப்பட்டவன் பாராட்டுவதையும்கூட, நன்றி கூறுவதையும்கூட பொறுத்துக்கொள்ள முடியாதவர்கள் எல்லாம் தமிழகத்திலே இருக்கிறார்கள் என்கிறபோது இந்த வேதனையை, நன்றியைக் கூறுகிறபோது என்னால் வெளிப்படுத்தாமல் இருக்க முடியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த மண்ணின் மக்கள் வாழ வேண்டுமானால் மழை இருக்க வேண்டும். இன்னொன்று நல்ல காற்று இருக்க வேண்டும். மழையும், காற்றும் தருவது வனம். வனம் இல்லாவிட்டால் மழை இல்லை. மழை இல்லாவிட்டால் வளம் இல்லை. சுவாசிப்பதற்கு நல்ல காற்று இருக்க வேண்டும் என்று சொன்னால், அந்தக் காற்றைத் தருவது வனம். வனம் இல்லாவிட்டால் நல்ல சுவாசம் இருக்காது. இதையும் கண்டறிந்து ஆய்வு செய்வதற்கு ஆய்வகங்களை தமிழகத்திலே உருவாக்கி, ஆயிரம் ஆண்டு காலம்

தமிழகம் எப்படி இருக்க வேண்டும் என்று தலைமுறைகளைக் கடந்து திட்டமிடுகிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு தலைமுறைகளைக் கடந்த நன்றியை நான் உரித்தாக்கி அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.*

திரு. உ. தனியரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டு மக்களுக்கு நலத் திட்டங்களை நாளும் தந்து, தமிழ்நாட்டு மக்களின் நெஞ்சமெல்லாம் ஒவ்வொரு நொடியும் நீக்கமற நிறைந்திருக்கிற தமிழ்நாட்டினுடைய ஒப்பற்ற முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) விதி 110-ன்கீழ் செய்யப் பெற்றிருக்கிற அறிவிப்புகள்மூலம் இதுவரை நாட்டில் வாழும் மனிதர்களுக்கு நலத் திட்டங்களைத் தந்திருக்கிறார், இன்று காட்டில் வாழும் விலங்குகள், பறவைகளுக்குக்கூட, அவற்றைப் பாதுகாப்பதற்கு கருணையோடு, அன்போடு காடுகளிலே வாழ்கிற விலங்குகள், அதையொட்டி வாழ்கிற மக்களுக்கு அதனால் ஏற்படுகிற சிக்கல்களைத் தீர்ப்பதற்காக, இதுவரை அரசியல் கட்சிகள்கூட கோரிக்கை வைக்காதபோது அந்தச் சூழல்களை தான் உணர்ந்து, அதற்கு நிரந்தரத் தீர்வு காண இந்தியாவிலேயே அதிநவீன கருவிகளைப் பயன்படுத்தி, அந்த விலங்குகளுக்கும், காடுகளையொட்டி வாழ்கிற மக்களுக்குமான பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படுத்த, இன்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருப்பதனை மனமாரப் பாராட்டுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)*

ஆதி திராவிட, பழங்குடியின மக்கள், குறிப்பாக விடுதிகளிலே தங்கி கல்வி பயில்கின்ற ஏழை மாணவக் குழந்தைகள், அவர்கள் உயர்தர, மேட்டுக்குடி மாணவச் செல்வங்களோடு எப்படித் தரமோடு கல்வி கற்க வேண்டும், வாழ்க்கைச் சூழல் அமைய வேண்டுமென்று ஆழமாகச் சிந்தித்து, அந்த மாணவக் குழந்தைகள் தரமான உடை, சுகாதாரமான வாழ்வு பெற்று, நேர்த்தியான பழக்க வழக்க, பண்பாட்டு, வாழ்வியல் சூழலோடு இந்த நவீன சமூகத்தை உருவாக்க வேண்டுமென்கின்ற கருத்தோடு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்று அறிவித்திருக்கிற இந்த நலத் திட்டங்களை நான் மனமாரப் பாராட்டி, வரவேற்று உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள். சுருக்கமாகப் பேசுங்கள்.

முற்பகல் 11-20

***திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை என் நன்றிதனைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒவ்வொரு நாளும் மக்களைப் பற்றியே சிந்தித்து, எப்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உறங்குகிறார்கள் என்று தெரியாத சூழ்நிலையிலே, மக்களைப் பற்றியே சிந்திக்கின்ற முதலமைச்சர் ஒருவர் இருக்கிறார் என்று சொன்னால், இந்தியாவிலேயே அது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களாகத்தான் இருக்க முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்துத் திட்டங்களும், அது தேர்தல் களத்திலே கொடுத்த வாக்குறுதிகளாக இருந்தாலும் சரி, தொடர்ந்து அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றிய பிறகும்கூட, நம் மக்கள் எவ்வாறு வாழ வேண்டும், எப்படி இருக்க வேண்டும், மக்கள் நலன் கருதி, வளர்ச்சித் திட்டங்கள் எவ்வாறு இருக்க வேண்டும், நலத் திட்டங்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்று சிந்தித்து செயல்படுகின்ற ஒரு முதலமைச்சரை நாம் பெற்றிருக்கின்றோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் 6 ஆம் முறை இங்கே அமரும்போது மேலும் தமிழகம் சிறக்கும் என்பதில் எந்தவொரு ஐயமும் யாருக்கும் இருக்க வேண்டாம். (மேசையைத் தட்டும் ஒலி)

விதி எண் 110-ன்கீழ் பல திட்டங்களை அறிவித்து, அவற்றைச் செயல்படுத்தியிருக்கிறார்கள் என்று சொன்னால், அது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களாகத்தான் இருக்க முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) அண்மையிலே மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள், பிறந்த குழந்தைக்குப் பாதுகாப்பாக பாலூட்டுவது எவ்வளவு முக்கியம் என்பதைத் துல்லியமாகக் கவனித்து, அவர்களுக்கென்று தனி அறை ஒன்று அமைத்துத் தந்திருக்கிறார்கள் என்றால், உலகத்திலேயே யாராலும் அதைச் செய்திருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மக்களைப் பற்றி சிந்திக்கின்ற ஒரு முதல்வராக, 'விஷன் 2023' என்று அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள், அதை எவ்வாறு செயல்படுத்த வேண்டும் என்பதைத் துல்லியமாக எண்ணி தினமும் சிந்தித்து, ஒவ்வொரு நாளும் அனைத்தையும் செய்து வருகின்றார்கள்.

மனிதன் வாழ்வதற்கு சுத்தமான காற்று தேவை. சுவாசிக்கின்ற காற்று, தொழிற்சாலைகள் அதிகமாக வரும்போது, சுத்தமில்லாமல் போகிறது; அசுத்தமாகிறது. ஆகவே, அதையும் சீர்படுத்துவதற்காக 25 இடங்களில் புதிய தொடர் காற்று கண்காணிப்பு நிலையங்கள் அமைத்து அந்தக் காற்று சுத்தமாக இருக்கிறதா, இல்லையா, தம் மக்கள் சிறப்பான காற்றை சுவாசிக்கின்றனரா, இல்லையா, (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி சுவாசித்தால்தான் அவர்கள் சிறப்பாக வாழ முடியும் என்பதையும் அவர்கள் சிந்தித்திருக்கிறார்கள். அவர்கள் உடல் வலிமை சிறப்பாக இருக்க வேண்டும், அப்போதுதான் தமிழக மக்கள் சிறப்பாக சிந்திக்க முடியும் என்ற அளவில் ஒரு சிறப்பான திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், அனைவரும் சமம்; மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் பார்வையிலே மக்கள் அனைவரும் சமம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நிரூபித்துக்காட்டும் வகையிலே, ஆதி திராவிட மக்களும், பழங்குடியின மக்களும் கல்வியில் மேம்பாடு அடைய வேண்டும் என்ற அடிப்படையில், அவர்கள் உயர்வதற்காக அனைத்துச் சலுகைகளையும் அறிவித்திருக்கிறார்கள். எவர்சில்வர் தட்டு குறித்த அறிவிப்பு என்பது அனைவரும் ஒரு சாரராக, ஒழுங்காக எல்லோரும் ஒரே மாதிரியாகச் சாப்பிடுகிறார்கள் என்று சொல்வது அவர்களுக்குப் பெருமை. சீருடையைப்போல, பல விஷயங்களில், கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டுமென்பதற்காக மடிக் கணினி, சைக்கிள் போன்றவற்றைக் கொடுப்பதெல்லாம் தொலைநோக்குச் சிந்தனையாகும். தொலைநோக்குப் பார்வையோடு தமிழகம் சிறப்பாக வர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் ஒவ்வொரு திட்டத்தையும் சிறப்பாகச் சொல்லியிருக்கிறார்கள்.

வன விலங்குகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். மக்களைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல், வன விலங்குகள் நீரைத் தேடி நாட்டிற்குள் வர ஆரம்பித்துவிடும் சூழ்நிலையிலே, அதற்கென்று ஒரு குழு அமைத்து, வன விலங்குகளையும் பாதுகாக்க வேண்டும், அவற்றால் பாதிக்கப்படுகின்ற மக்களையும் பாதுகாக்க வேண்டுமென்ற அடிப்படையிலே சிறந்த திட்டத்தை அறிவித்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றிகூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணங்கும் தெய்வங்களின் வடிவாகக் காண்கிறேன் அம்மா. வாழ்வெல்லாம் நன்றியுரைக்கும் வரம் ஒன்றைக் கேட்கிறேன் தாயே. தங்களின் ஒளிக்கீற்றுகளில் உயிர்வாழும் கோடானு கோடி எளிய தொண்டர்களில் ஒருவனான என்னை, தங்களின் சீரிய தலைமையின்கீழ் மீண்டும் வனத் துறை அமைச்சராக நியமித்து, மக்கள் பணியாற்றிடும் நல்வாய்ப்பினை வழங்கிய, கண்ணால் காணும் கடவுளின் பொற்பாதங்களில் கோடானு கோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி, பணிந்து வணங்குகிறேன் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)*

தர்மத்தின் பிறப்பிடமே, அன்பின் உறைவிடமே, ஆற்றலின் எழுச்சியே, பகைவருக்கும் சிம்ம சொப்பனமே, தமிழ்நாட்டின் ஆதார சக்தியே, தமிழ்நாட்டு மக்களின் வாழ்வாதாரமே, வனத் துறையின் வளமே, பசுமையின் நுண்ணுயிரே, 'அம்மா' என்ற சொல்லில் ஆயிரம் திட்டங்கள் தந்து, நாட்டு மக்களின் வாழ்வைப் பாதுகாத்த அன்னையே, மகளிர் மற்றும் குழந்தைகள் நலவாழ்வில் சிறப்புக் கவனம் செலுத்தி அவர்களை உய்விக்க வந்த பரம்பொருளே, தங்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன் அம்மா.

முற்பகல் 11-25

வனத் துறையின் சார்பாக மனித வன உயிரின மோதலைத் தடுக்கும்பொருட்டு, அதிநவீன கருவிகளுடன், சிறப்புப் பயிற்சி பெற்ற பணியாளர்களைக் கொண்ட அதிவிரைவுக் குழுக்கள், கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, ஊட்டி, கூடலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் ரூ.8 கோடியே 64 இலட்சம் செலவில் ஏற்படுத்தியும், பழங்குடியின மக்களின் வாழ்வாதார வளத்தைப் பெருக்குவதற்கும், அரசுக்குக் கணிசமான வருவாயை ஈட்டித் தரும் வகையில் வேலூர், சேலம், ஈரோடு, தருமபுரி மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள காப்புக் காடுகளில் மற்றும் பட்டா நிலங்களில் சந்தன மர வளர்ப்பைப் பெருக்கவும் நடப்பு ஆண்டில் ரூபாய் 10 கோடி நிதி ஒதுக்கியும், வனத் துறையின்

சார்பாக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி எண் 110-ன்கீழ் முத்தான இரண்டு அறிவிப்புகளை வெளியிட்டு, நாட்டு மக்களுக்கு மட்டுமல்லாமல் வன உயிரினங்களுக்கும், வனத்திலுள்ள பல்லாயிரக்கணக்கான இயற்கை வளங்களைப் பாதுகாத்திட சீரிய திட்டங்களைச் சிறப்புடன் செயலாற்ற ஆணையிட்ட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் வனத் துறையின் சார்பாக கோடானு கோடி நன்றி மலர்களைப் பணிந்து வணங்கி காணிக்கையாக்கி அமைகிறேன் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய மாட்சிமை தாங்கிய மாண்புமிகு முதலமைச்சர், எட்டு கோடி தமிழ் மக்களுடைய இதயத்திலே இரும்பு சிம்மாசனம் இட்டு, சிம்ம ராசிக்குப் பெருமை சேர்க்கிற எங்கள் சிங்க நிகர்த் தலைவியின் புனிதப் பாதங்களை வணங்குகிறேன்,

'மனத்துக்கண் மாசிலன் ஆதல்; அனைத்துஅறன்
ஆகுல நீர பிற'

என வள்ளுவப் பெருந்தகை அவர்கள் குறிப்பிட்டார்கள்.

தமிழ்நாட்டினுடைய மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மனதிலே மட்டுமல்லாமல், சுற்றுப்புறச்சூழலிலும் மாசு அகற்றப்பட வேண்டும் என்ற மக்கள் நலக் கொள்கை நோக்கோடு, தமிழகத்திலே வறுமை தீர்க்க விதி எண் 110-ன்கீழ் தமிழகத்திற்கு சீர்மிகு திட்டங்களைத் தந்து, எதிர்க்கட்சிகளுக்குத் தேர்தலிலே 111-ஐயும் தந்தது எட்டாவது வள்ளல் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். இல்லை, கண்ணுக்கு எட்டிய தூரம் வரை மாண்புமிகு அம்மா அவர்கள் ஒருவர்தான் வள்ளல் என்பதை நிரூபிக்கின்ற வகையிலே கடந்த ஆட்சியிலே காசுக்குக் கட்டுப்பட்ட வாரியமாக இருந்த மாசுக் கட்டுப்பாடு வாரியத்தை, மாசைக் கட்டுப்படுத்தக்கூடிய வாரியமாக மாற்றியமைத்த எங்கள் மாசற்ற மனிதர் குல மாணிக்கம், (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டிஆர்.பி. ராஜா, நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசட்டும். உங்களை ஒன்றும் சொல்லவில்லை, (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர், சொல்லி முடியுங்கள்.*

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே முதன்முறையாக தனிச் சிறப்புமிக்க 25 இடங்களில் 30 கோடி ரூபாய் செலவில் தொடர் காற்று கண்காணிப்பு நிலையங்களை அமைக்க உத்தரவிட்ட இதய தெய்வத்தின் புனித மலர்ப் பாதங்களில் நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள், ஆதி திராவிட மக்களுக்கு எட்டாத உயரத்தில் இருந்த உயர் கல்வியினை இந்தியாவே போற்றும்வகையில் அரசாணை எண் 6-ஐத் தந்து, எங்கள் இன மக்களுக்குக் கல்வியில் ஏற்றம் தந்தீர்கள் அம்மா, நாட்டில் வான் மழை பெய்யத் தவறினாலும், அடித்தட்டு மக்களுக்குத் தாங்கள் வாரி வழங்குவதில் குறைவில்லை அம்மா. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் விதி எண் 110-ன்கீழ் அறிவிக்கப்பட்ட அரசு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் துரிதமாகவும், சுத்தமாகவும் உணவு சமைத்திட நீராவிக் கொதிகலன்கள், பழங்குடியின மாணாக்கர்களின் அறிவுத் திறனை வளர்த்திட அறிவுத் திறன் வகுப்பறைகள், பணிபுரியும் மகளிருக்கான விடுதிகள் தொடங்குதல், மாதிரிப் பள்ளிகள் தொடங்குதல், 5 ஆதி திராவிட/பழங்குடியின உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துதல், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல 15 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துதல் மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கர்களுக்கு தட்டு, டம்ளர் வழங்குதல் போன்ற திட்டங்களினால், ஆதி திராவிடர், பழங்குடியினர், கிறிஸ்துவ மதம் மாறிய ஆதி திராவிட*

[திரு. ந. சுப்ரமணியன்] [2015 ஆகஸ்ட் 27

மாணாக்கர்களின் கல்வித் திறன் மென்மேலும் உயர்ந்து, பொதுப் பிரிவினரின் கல்வித் தரத்திற்கு இணையாக வழிவகுத்துள்ளீர்கள் அம்மா. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் சார்பிலும், எங்கள் இன மக்களின் சார்பிலும் கோடானு கோடி நன்றியினை மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பித்து வணங்குகிறேன் தாயே.

(முற்பகல் 11-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆதி திராவிட மக்களின் அறியாமையைப் போக்கி, அறிவைப் புகட்டி, ஆதரிப்பவர் நம் மாண்புமிகு அம்மா அவர்கள்.

"அறிவை வளர்த்திட வேண்டும்-மக்கள்
அத்தனை பேருக்கும் ஒன்றாய்,
பிரியோரை மேம்படச் செய்தால், பின்பு
தெய்வம் எல்லோரையும் வாழ்த்தும்"

என்றார் பாரதியார். அந்த வரிகளுக்கேற்ப, அன்பு தெய்வம், அறிவு தெய்வம், நம் மாண்புமிகு அம்மா அவர்கள், ஏழைகளின் ஒட்டுமொத்த நலன் காத்து வாழ வைப்பதால், தெய்வம் வாழ்த்துகிறது.

எளியோரைக் காக்க, ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்களை உயர்த்த வாரிக் கொடுக்கும் வற்றாத ஊற்று, எளியோரின் ஏந்தல், எண்ணற்ற அறிவிப்புகளை வெளியிட்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் கலங்கரை விளக்கமாக, எளியோரின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்கிறார்கள்.

மௌரியர் காலத்தில் எழுதப்பட்ட கௌடில்யரின் அர்த்தசாஸ்திரம், வன நிருவாகத்தின் தேவையை வலியுறுத்துகிறது. அசோகர், தனது தூண் பிரகடனங்கள்மூலம், சுற்றுச்சூழல் மற்றும் வனப் பாதுகாப்பின்மீது கவனம் செலுத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து வெளிப்படுத்தியுள்ளார். சுற்றுச்சூழலைப் பாதுகாக்க பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டு, நிகழ்கால அசோக சக்கரவர்த்தியாகத் திகழும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு அவையின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)